**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.4/2025

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் புதன் கிழமை PW1ன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 15.04.2026 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | மகாராஜன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் முதல் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 21.08.2024 தாவா ஏ ஷெடியூல் ஒரு பகுதியை பொருத்து ஏற்பட்ட கிரய சாசனம் வா.சா.ஆ. 1 ஆகவும்

2) 02.05.2024- ஏ ஷெடியூல் ஒரு பகுதியை பொருத்து ஞானசௌந்தரி பெயரில் ஏற்பட்ட கிரய சாசனம் வா.சா.ஆ.2 ஆகவும்

3) 11.07.2024- ஏ ஷெடியூல் ஒரு பகுதியை பொறுத்து ஞானசௌந்தரி 2 ம் வாதி பெயரில் செய்து கொடுத்து கிரய சாசனம்வா.சா.ஆ.3 ஆகவும்

4) தாவா சி ஷெடியூல் ஒரு பகுதியை பொறுத்து ஏற்பட்ட கிரய சாசனம் வா.சா.ஆ.4 ஆகவும்

5) 02.12.2024- தாவா சொத்துக்கான சிட்டா மற்றும் அடங்கல் வா.சா.ஆ. 5 ஆகவும்

6) 02.12.2024 சீர்காழி மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய சிட்டா மற்றும் அடங்கல் வா.சா.ஆ. 6 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**